# ஓய்வு நேரம் குறித்து இஸ்லாத்தின் முக்கியத்துவமும் பொழுதுபோக்கின் வரையறைகளும்

SM.Hakeema Beevi[1] & M.S Ismiya Begum[2]

[1]Assistant Lecturer Department of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
[2]Lecturer Department of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
hakee97693@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

*மனித வாழ்வின் அனைத்துச் செயற்பாடுகளும் நேரத்தை மையமாக வைத்தே அமைந்துள்ளன. மனிதன் தனது ஆரோக்கியத்தை பேணுவதற்காகவும் இளைப்பாறுவதற்காகவும் காலத்தின் ஒரு பகுதியை ஓய்வுக்காக ஒதுக்கிக் கொள்கிறான். இன்றைய தொழிநுட்ப வளர்ச்சியின் பின்னணியில் ஓய்வு நேரத்தை கழிப்பதெற்கென பல்வேறான பொழுதுபோக்கு விடயங்கள் வளர்ந்து வருவதுடன் அதன் பயன்பாடும் அதிகரித்துள்ளன. இந்தவகையில் இஸ்லாம் ஓய்வு நேரத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தையும், பொழுது போக்கு அம்சங்களில் இஸ்லாம் கூறியுள்ள வரையறைகளையும் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு, பண்பு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளம் என்பவற்றைக் கொண்டு பெறப்பட்டுள்ளதுடன் முடிவுகளாக, ஓய்வு என்பது இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதம், இறைவனே இக்காலத்தையும் வாழ்வையும் தோற்றுவித்துள்ளான், அவனால் வழங்கப்பட்டுள்ள இது மனித வாழ்வையும் இறை நம்பிக்கையையும் ஒன்றிணைப்பதாகவே காணப்படுகின்றது. ஆகவே அதற்கான பாதைகளை இஸ்லாம் சொல்லியதுடன் மட்டுமன்றி நபி (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் வாழ்வின் மூலம் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளது. அந்த வகையில் பல கேளிக்கைகளையும் மனிதனுக்கு தீமை பயப்பதையும் விட்டு விலக்கி பொழுதுபோக்கு அம்சங்களாக வணக்கவழிபாடுகளில் ஈடுபடல், இயற்கையை ரசித்தல், நண்பர்களுடனும் குடும்பத்துடனும் இணைந்து பயணங்கள் மேற்கொள்ளல், நூல்கள் வாசித்தல் பேன்ற செயற்பாடுகளை பொழுதுபோக்கு அம்சங்களாக வரையறை செய்வதுடன் அதனை ஏற்று வாழ்வதால் மனிதன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவான் என்பன இவ்வாய்வினூடாக கூறப்படுகின்றன.*

***திறவுச் சொற்கள்:*** *ஓய்வு நேரம், முக்கியத்துவம், பொழுதுபோக்கு, விதிமுறைகள், தடுக்கப்பட்டவைகள்*

## அறிமுகம்

கால ஓட்டமும் நேர சூழற்சியும் இல்லாமல் போய்விடில் வெறுமையான உலகமே இங்கு நிலைத்திருக்கும். அந்தவகையில் பார்த்தால் காலம் முக்கியமானது என்று குறிப்பிடுவதை விட காலம் இல்லையேல் ஒன்றுமில்லை என்று கூறுவதே பொருத்தமானது. இதன் அடிப்படையில் இந்த காலத்தையும் நேர ஓட்டத்தையும் பற்றி பலர் கருத்துக்களை தெரிவிக்கின்றனர். ''பிரிட்டிஷ் அரசின் புதிய கலைக்களஞ்சியத்தின் வரையறையின்படி, காலம் என்பது ஒரு தொடர் அதற்கு பரிமாணம் இல்லை. மேலும் அது, தத்துவம் நிறைந்த ஒரு பொருள், கணித விஞ்ஞானத்தின் ஒரு வடிவம். அது ஒரு பொதுவான உணர்வு, முன்னும் பின்னும் இடையே உள்ள உணர்வு பூர்வமான உறவு நிலையை காட்டக்கூடியது. ஒரு நிகழ்வு நிகழும்போது அதனை குறிப்பு செய்யும் முறை (அதாவது சகாப்தத்தை குறிப்பிட்டு, காலத்தின் நிலையான இடைவெளியை நிறுவுதல்). வெப்ஸ்டரின் புதிய உலகக் கல்லூரியின் அகராதி படி ''நேரம் என்பது தனித்துவமானது. ஏதாவது ஒன்றை நிகழ்த்துவதற்கு வழக்கமானது" ஆகும் (Rafikul Islam, etc .al, 2014).

மேலும் 'நேரம் என்பது மாற்றத்துடன் தொடர்புடையது. ஒரு நிகழ்வு நடப்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டு பின்னர் நடக்கும் எல்லா செயற்பாடுகளையும் அளக்கும் அளவுகோலாக அது மாற்றம் பெறுகிறது. அந்தவகையில் ''Tennessee Williams: நேரம் என்பது இரு சம்பவங்களுக்கிடையிலான இடைவெளியாகும். அந்த இடைவெளியின் பருமனை அளவிடும் நேர அலகுகளை ஆண்டுகள், மாதங்கள், நாட்கள், இரவுகள், பகல்கள், மணித்தியாலங்கள், நிமிடங்கள், விநாடிகள் என்றும் அடையாளப்படுத்த முடியும்'' (தேவேந்திரன், 2019) ''காலம் என்பது சுய இயல்பு, எல்லா நிகழ்வுகளுடையதும், காரணங்கள் மற்றும் நிலைமைகளின்படி வெளிப்படுத்துவதும் ஆகும்'' ''நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தை பார்! ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை'' (சுவாமி விவேகானந்தர்). ''இழந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம், இழந்த காலத்தை ஒரு போதும் பிடிக்க முடியாது'' (நெப்போலியன்) என்ற கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

மதங்களும் நேரத்தினைப் பற்றி குறிப்பிடுகனின்றன. காலம் நேர்கோட்டில் இருப்பதாக இஸ்லாமிய மற்றும் கிறித்தவ இறையியலாளர்கள் கருத்து தெரிவித்தனர். வேதாகமத்தில் இருந்து வரும் வசனங்கள், எல்லாவற்றுக்கும் ஒரு காலம் இருக்கிறது என்று நமக்குக் கூறுகின்றன. ''ஒவ்வொரு காலத்திலும் ஒரு காலம் இருக்கிறது மேலும், வானம்- பூமிக்கிடையிலான அனைத்து விடயங்களின் அனைத்து நோக்கத்ததையும் அடைந்து கொள்ள நேரம் தேவை'' (வேதாகாமம் : 3 : 1) மேலும் இந்து மதம், கால சூழற்சி (மறுவாழ்வு என்ற கோட்பாடு), காலம் என்பது கடவுள் (காலம் கடவுளின் வெளிப்பாடு), காளச்சந்திரா (வாழ்க்கையின் பிளவுகளும் அசைவுகளும், காலவரையறைகளை, நேரச்சட்டங்கள் மூலம் உலகங்களை நிலைபெறச் செய்கின்றன.) போன்ற விடயங்கள் பற்றி பேசுகிறது. பௌத்த மதம் மூன்று முறையும் மூன்று காலங்களும் என்ற வட்டத்தினுள் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றியும் கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் காணப்படும் காலத்தின் ஒரு கட்டமைப்பு பகுதி ஓய்வு நேரமாகும். அந்தவகையில் ''சுய திருப்தியை எதிர்பார்த்து தானாக மேற்கொள்ளும் செயற்பாடாகும்'', என்று ஓய்வின் தன்மை குறித்து குஷ்மன் எனும் அறிஞர் கூறுகிறார். மேலும், ''எந்த ஒரு செயலிலும், எந்த ஒரு வெகுமதியையும் எதிர்பார்க்காமல் இன்பத்தை அடைய வேண்டுவதற்கான ஒன்றாக'' மனமகிழ் என்பவர் கருதுகிறார். (Mohammed, etc.al, 2014). ''ஓய்வு நேரம் என்பது, ஒருவர் தேர்ந்தெடுக்கும் எந்த விதத்திலும் செலவழிக்கப்படும் ஒரு விடயமாகும்'' (Stefan Poser, 2011). ஓய்வு நேர செயற்பாடு என்பது, அன்றாட நடவடிக்கைகளின் வடிவத்தை எடுத்துக் கொள்ளும். எடுத்துக்காட்டாக, தோட்டம் அல்லது சமையல் வேலைகளை குறிப்பிடலாம். உண்மையில், பொழுதுபோக்குக்காக கருதக்கூடிய செயல்பாடுகளின் பட்டியல் கிட்டத்தட்ட முடிவற்றதாக இருக்கிறது. இது நபருக்கு நபர் வேறுபடுகிறது, கருத்துக்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் ''பாரம்பரியமாக இசை, நாடகம், வாசிப்பு, மற்றும் ஓவியம் போன்றவற்றோடு ஓய்வு நேரம் கழிக்கப்பட்டது. ''18, 19''ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இதில் தொழில்நுட்பத்தின் தாக்கம் ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடந்து தொலைக்காட்சி, தொலைபேசி மேலும் பல டிஜிட்டல் தொழில் நுட்ப சாதனங்களின் வருகை ஓய்வு நேரத்தை செலவிடுவதில் பாரிய பங்குவகிக்கத் தொடங்கின'. (Lynne Ciochetto 2015).

எனினும், இஸ்லாம் வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய ஒன்று என்பதற்கு அமைய மனித வாழ்வோடு பிணைக்கப்பட்டுள்ள காலத்தைப் பற்றியும் அதன் தனித்தன்மைகளை பேசுவதுடன் மட்டுமல்லாது ஒரு மனிதன் தனது வாழ்நாளை எவ்வாறு சிறந்த முறையில் கழிக்க வேண்டும் என்பது குறித்தும் பல விடயங்களை முன்வைக்கின்றது. அந்தவகையில் ஓய்வு நேரம் குறித்த இஸ்லாமிய வழிகாட்டல்கள் எவ்வாறு அமைந்துள்ளது பற்றி இவ்வாய்வானது பகுப்பாய்வு செய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:**

காலம் மனித வாழ்வின் நிலவுகைக்கும் இருப்பிற்கும் முக்கியமான ஒன்று. மதங்களும் அறிஞர்களும் நேரத்தைப் பற்றி பல கருத்துக்களையும் விளக்கங்களையும் முன்வைத்த போதிலும் இன்றைய கால கட்டத்தில் பொன்னான நேரம் பொறுப்பில்லாத பல வழிகளில் கழிக்கப்படுகின்றது. இஸ்லாம் தவிர்ந்த ஏனைய மதங்கள் கேளிக்கைகளையும் அர்த்தமற்ற வீணான காரியங்களை செய்வதற்கு எவ்வித தடைகளை விதிக்கவுமில்லை அதன் வரையறைளை கூறவுமில்லை. பலரது நிலை 'ஏதோ ஒரு காரணியின் மூலம் நேரம் கடத்தப்படுவது போதுமானது என்ற எண்ணப்பாட்டுடன் காணப்படுகின்றது. ஏனெனில் ''சுய திருப்தியை எதிர்பார்த்து தானாக மேற்கொள்ளும் செயற்பாடாகவும்'', (குஷ்மன்) ''எந்த ஒரு செயலிலும், எந்த ஒரு வெகுமதியையும் எதிர்பார்க்காமல் இன்பத்தை அடைவதாக செயற்படல் என்று பொழுபோக்கினை குறித்த ஒரு வட்டத்தை கொண்டு அமைததுக்கொள்கிறார்கள். இவர்களது இவ்வுலகத்திற்கான நோக்கம் வெறுமனே இன்பத்தை அடைவதாக மாத்திரம் காணப்படுவதால் அவர்களுடைய செயற்பாடுகள் நன்மை தீமை என்ற நிலைப்பாட்டிலிருந்து பிரிந்து செல்கின்றது.

இந்நிலையில் நேரத்தை கழிப்பதெற்கென பல்வேறான சாதனங்களின் வருகை அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. அதாவது ''வர்த்தக, விஞ்ஞான அல்லது இராணுவ நோக்கங்களுக்காக ஆரம்பத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த தொழில்நுட்பங்கள், ஓய்வு நேர பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்டவையாகும்'' (Stefan Poser, 2011). மேலும் பல தொழில்நுட்ப வாய்ப்புகள் அன்றாட வாழ்வின் பெரும்பாலான அம்சங்களில் இடம்பெயர்ந்துவிட்டன. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது இலகுவான வேலை என்பதால், தான் விரும்பிய நேரத்தில் விரும்பியவற்றை விரும்பிய போது பார்ப்பதற்கு இது உதவுகின்றது. இது பால், வயது, சமூகம் என்ற வேறுபடில்லாமல் அனைவரிடத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. இந்நிலையில் வாழ்க்கை பாதையின் வழிகாட்டியாக அமைந்துள்ள இஸ்லாம் நேரம் குறித்து என்ன வழிகாட்டல்களை வழங்கியுள்ளது என்பவற்றை ஆழ்ந்து நோக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வு நோக்கம்**

1. இஸ்லாம் ஓய்வு நேரத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை கண்டறிதல்
2. பொழுது போக்கு அம்சங்களில் இஸ்லாம் கூறியுள்ள வரையறைகளை கண்டறிதல்.

**பகுப்பாய்வு முறை**

இவ்வாய்வின் நோக்கங்களைக் ஆய்வு செய்வதற்காக இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக: நூல்கள் ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவை பயன்படுத்தப்பட்டு பண்பு முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஓர் கோட்பாட்டு முறையினை தழுவிய ஆய்வாகும். இக்கோட்பாடானது, அல்குர்ஆனினதும் சுன்னாவினதும் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவை கூறும் விதிகளும் வரையறைகளுமே இங்கு ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இரண்டாம் நிலைத்தரவுகளினூடாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

இப்பகுதி இஸ்லாம் நேரம் பற்றி எவ்வாறான கருத்தாடல்களை கொண்டுள்ளது, நேரம் பற்றிய இஸ்லாமிய வரைவிலக்கணங்கள், காலத்திற்கு அது வழங்கும் முக்கியத்துவம் எத்தகையது போன்ற விடயங்களை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது.

**நேரம் குறித்து அல்குர்ஆன் சுன்னா:**

அல்குர்ஆன் ''*அல்லாஹ்விடத்தில் அவர்களுக்குப் பின் வேறு சில மாதங்கள் இருக்கின்றன. வானங்களும் பூமியும் அவற்றில் நான்கும் புனிதமானவை (புனிதமானது)* (அல்-துபா: 35)'' என்று கூறுவதை ஹதீஸ் பின்வருமாறு விளக்குகிறது. அபூபக்கர் (றழி) அறிவித்த ஹதீஸ் விவரணையாக: நபிகள் நாயகம் அவர்கள் கூறியதாவது, ''*காலம் மீண்டும் அதன் ஆரம்ப நிலைக்கு வந்துவிட்டது. வானங்களையும், பூமியையும் படைத்தவன் ஒருவனே! ஒரு ஆண்டு பன்னிரண்டு மாதங்களாகும், இதில் நான்கு புனிதமானவை. மூன்று அடுத்தடுத்து உள்ளன. துல்க.்.தா, துல்-ஹஜ்ஜா மற்றும் அல் முஹர்ரம், (நான்காம்) ரஜப் என்றார்.*'' (புகாரி, தொகுதி 6, புத்தகம் 60,எண் 184).

அல்-குர்ஆனிலிருந்து, பல விடயங்கள் காலத்துடன் தொடர்புட்டவையாக காணப்படுகின்றது, என்பது கண்டறியப்பட்டுள்ளது, உதாரணமாக அல்லாஹ் நோன்பு மாதத்தை (ரமலான் மாதம்) தொடங்குவது பற்றி பின்வருமாறு அல்குர்குர்ஆனில் கூறுகிறான்: ''*(அது) மனிதர்களுக்கு நேர்வழி காட்டியாகவும், இன்னும் தெளிவான அருளாகவும் இருக்கிறது. (அது) நேரான வழிகாட்டியாகவும், நேர்வழியாகவும் இருக்கும். உங்களில் எவரேனும் நிகழ்காலம் மற்றும் சாட்சி மாதம் (சந்திரன்) அடைந்தால், அவர் விரதம் இருக்கட்டும்* (அல்-பகரா : 185).

''*இரவு பகல் மாறி மாறி வருவதில் அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் உண்டு*'' (அல்குர்ஆன்) காலம் என்பது உலகத்தின் சுழற்சியாகவே இங்கு நோக்கப்படுகின்றது. இச்சுழற்சியின் அடிப்படையில் தான் மனித வாழ்வின் ஒவ்வொரு கடமைகளும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது என்பது மேற்கூறப்பட்ட அல்குர்ஆன், சுன்னா வசணங்களினூடாக தெளிவுபடுத்தப்படுகின்றன.

**ஓய்வு நேரம் குறித்து இஸ்லாத்தின் முக்கியத்துவம்**

- மனித வாழ்வு முழுவதும் வணக்கத்திற்கானது:

இந்த உலகத்தில் மனிதன் இறைவனை வணங்குவதற்காக மாத்திரமே படைத்துள்ளான். ''*மனித இனத்தையும் ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவன்றி படைக்கவில்லை*'' (அல்குர்ஆன், 51:56) இந்தவகையில் நோக்கும் போது மனிதன் ஒவ்வொரு விநாடியையும் இறைவணக்கத்திற்காக மிகச் சரியாக கட்டமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. தொழுவதும், நோன்பு நோற்பதும், ஹஜ் செய்வதும், ஸகாத் கொடுப்பது மாத்திரம் இங்கு இறை வணக்கங்களாக கொள்ளப்படவில்லை. மாறாக, இறைவனால் தடுக்கப்பட்டதை விலக்கி ஏற்றுக்கொள்ளப்பட்டதை செய்வது அனைத்தும் இறை வணக்கத்தையே சாரும். ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குதற்காகவன்றி படைக்கவில்லை என்ற இறை கட்டளைக்கேற்ப மனிதனுடைய ஒவ்வொரு செயற்பாடுகளையும் வணக்கமாக மாற்றிக் கொள்வது அவசியமாகும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: ''*இம்மை மறுமையின் விளைநிலம்*'' (நூல்:புஹாரி) மனிதன் சோதிக்கப்படுவதற்காகவே இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டுள்ளான். இவ்வுலகில் தன் வாழ்வை சரியாக அமைத்துக் கொள்பவன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுகின்றான். மாறாக தன் வாழ்வில் எவ்வித குறிக்கோளும் இல்லாதவன் ஈருலகிலும் தோற்றுவிடுகிறான்.

அதுமட்டுமன்றி இஸ்லாத்தில் கடமைகள் அனைத்தும் நேரம் குறிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. ''தொழுகை மு.்.மின்கள் மீது நேரம் குறிப்பிடப்பட்ட ஓர் வணக்கமாகும்'' உண்மையில் ஒரு மனிதன் எந்த எந்த காலத்தை எது எதற்கு பயன்படுத்த வேண்டும் என்ற ஓர் நிலை காணப்படுகின்றது. கடந்த காலத்தில் செய்ய வேண்டியதை நிகழ்காலத்திலோ நிகழ்காலத்தில் செய்ய வேண்டியதை வரும் காலத்திலோ செய்வதால் எத்தகைய பிரயோசனமும் கிடைக்காது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நேரமுள்ளது அதனை அந்த நேரத்தில் செய்வதை விட்டு அந்நேரத்தை வீணாக செலவிடுவதனால் நஷ்டம் மட்டுமே மீதியாகும். இன்று மனிதனின் வாழ் நாளை பல்வேறுபட்ட காரணிகள் நகர்த்திச் செல்கின்றது அவை அனைத்தும் மனித வாழ்விற்கு பொருத்தமானதாக நன்மையுடையதாக அமைந்துள்ளதா என்பதில் சந்தேகம் உள்ளது.

- காலம் இறைவனின் சத்தியத்திற்கு உட்பட்டது:

அல்குர்ஆனின் பல இடங்களில் காலம் பற்றி குறிப்பட்டிருப்பினும் இறைவன் காலத்தினைக் கொண்டு சத்தியம் செய்தவாறு தன் கட்டளைகளை எத்தி வைக்கிறான்.

"*நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களைத் தவிர (வேறு) ஒருவருக்கொருவர் சத்தியத்தைக் கொண்டு (ஒருவருக்கொருவர்) பரிந்துரைத்து, பொறுமையைக் கொண்டு ஒருவருக்கொருவர் சிபாரிசு செய்கிறார்கள்*'' (ஸூரா அல்-அஸ்ர்).

இச்ஸூராவினை மேலும் விளக்கப்படுத்துவதாக ''அல்லாஹ், அவன் பெயர்களையோ அல்லது அவனுடைய குணங்களைக் கொண்டு அல்லாமல் வேறு எதனாலோ சத்தியம் செய்ய

அனுமதிக்கப்படமாட்டான். அனைத்துக்கும் அல்லாஹ் (மீது) சத்தியம் செய்தது மிகவும் முக்கியமான பொருளையும், மதிப்புமிக்க கவனத்தையும் பெற்றுள்ளது. ஸுராஹ் அல் அஸரில், சத்தியம் செய்ய நேரம் பயன்படுத்தப்பட்டது, அதாவது நேரம் மிகவும் முக்கியமானது.'' என்பதை சுட்டிக்காட்டுவதாக இங்கு அமைந்துள்ளது. மேலும் இவ்வத்தியாயத்தில் காலத்தைக் கொண்டு சத்தியம் செய்து விட்டு அதன் பின்னர் மனிதர்களின் செயற்பாடு பற்றியும் குறிப்பிடுகிறான். அதாவது வணக்கவழிபாடுகளுடன் சேர்த்து நல்ல விடயங்களை செய்பவர்களே வெற்றி பெற்றவர்கள் என்பதை கூறுகின்றது. இங்கு மனித செயற்பாடுகள் காலத்தைச் சூழ்ந்ததாகவும் அந்த காலத்தின் மீது நல்லவை நிகழப்பெற வேண்டும் என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது.

மேலும் ''*அவர்களில் ஒரு பேச்சாளர்,'' நீங்கள் எவ்வளவு காலம் தங்கியிருந்தீர்கள்?'' என்று கேட்டார். ''ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் நாங்கள் தங்கியிருந்தோம்'' என்று அவர்கள் கூறினார்கள். (அதற்கு) அவர்கள், ''நீங்கள் எவ்வளவு காலம் தங்கியிருந்தீர்கள் என்பதை உங்கள் இறைவன் நன்கறிவான்'' என்று கூறினர்.* (திருக் குர்ஆன் 18:19).

''ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் நாங்கள் தங்கியிருந்தோம்'' என்று அவர்கள் கூறுவார்கள்'' (திருக் குர்ஆன் 23:113). ஏனெனில் இவ்வுலகத்தில் மனிதனின் வாழ்வு மிகக் குறைவாகும் அதனை முறையாக பயன்படுத்த வேண்டும் என்பதே இதன் புரிதலாகும்.

- ஸஹாபாக்கள் தங்கள் ஓய்வின் ஒவ்வொரு நொடியையும் இறை திருப்தியை கொண்டு பயன்படுத்தினார்கள்

''*அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டே உள்ளங்கள் அமைதி பெறுகின்றன*'' என்ற அல்குர்ஆன் (13 : 28) வசனத்திற்கு ஏற்ப நபித் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வை இறை எண்ணத்துடன் கழித்துள்ளார்கள். அந்தவகையில், நன்மையான காரியங்களில் ஈடுபடல், அல்குர்ஆன், தொழுகை, திக்ர் போன்ற காரியங்களில் ஈடுபடல் மேலும் இஸ்லாத்தை எத்திவைத்தல், நல்ல விடயங்களை ஓய்வு நேரங்களில் பிறருடன் பகிர்ந்து கொள்வதுடன் குடும்பத்திற்கானதும் சமூகத்திற்குமான கடமைகளை நிறைவேற்றல் போன்ற அனைத்து அம்சங்களும் இதனுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- இறைவன் காலத்தை தோற்றுவிக்கிறான்

முஹம்மது (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் ''*நேரத்தை நீங்கள் சபிக்க வேண்டாம் நிச்சயமாக அல்லாஹ் (தன்னுடைய) நேரத்தைச் செய்து கொண்டிருந்தான். அவனே இரவையும் பகலையும் மாறி மாறி வரவைக்கிறான்*'' என்று கூறினார்கள். (நூல், புஹாரி)

காலத்தின் மதிப்பை புரிந்து கொண்டவர்கள் தங்கள் நேரத்தை ஒழுங்குபடுத்தி யதார்த்தமான திட்டங்களை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இறைவனை திருப்திப்படுத்தக்கூடிய

ஒன்றை மட்டுமே செய்ய வேண்டும் என்று ஒரு மனிதன் உணர்ந்திருக்கும்போது, ஒரு விசுவாசி வாழ்க்கை முழுவதும் வழிபாட்டைக் கருத முடியும். மதக் கடமைகள் என்பது முதல் முன்னுரிமையாகத் தான் இருக்க வேண்டும். இருப்பினும், காலத்தை கடக்கும்போது மிகவும் நெகிழும் நிலையில் இருக்க வேண்டும், போன்ற விடயங்களை முன்னைய ஆய்வின் கலந்துரையாடலில் மற்றும் முடிவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. (Aisha Stacey, 2018)

- கால ஓட்டத்திற்கும் இறை நம்பிக்கைக்கும் இடையில் கணப்படும் உறவு இறைவனைப் புரிந்து கொள்வதற்கானதாகும்

*''இதோ! வானங்களையும், பூமியையும் படைத்துலுள்ளதிலும், இரவும், பகலும் (ஒன்றன் பின் ஒன்றாக) மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன''* (அல்-இம்ரான்: 190).

மனிதனின் ஆயுட்காலம் அவனுடைய பெரிய மூலதனம், அதில் அவன் கியாம நாளில் (இறுதி) நாளைப்பற்றி கேட்கப்பட மாட்டான். அதை எப்படி செலவழித்தார், எப்படி அதை அவர் கையாண்டார் என்பது பற்றி அவரிடம் கேட்கப்படும். இது ஜாமிஉல்-திர்மிதீயில் விவரிக்கப்பட்டுள்ளது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''ஒரு அடிமையின் பாதங்கள், நான்கு விஷயங்களைப் பற்றி விசாரிக்கப்படும்வரை, நியாயத் தீர்ப்பு நாளன்று நகர முடியாது என்றார்கள், அவை; அவன் இளமை – அதை எப்படி உட்கொண்டான் அவனுடைய பொருளும், அவன் சம்பாதித்தவை யாவும் (யாவும்) பின் அவன் மீது சத்தியமாக- மேலும், அவன் நன்கறிந்தவன். நபி (ஸல்) அவர்கள் இரண்டு விடயங்களை மக்கள் முழுமையாக பயன்படுத்துவதில்லை, அவற்றில் ஒன்று ஓய்வு நேரம், மற்றது ஆரோக்கியம்'' (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (றழி), நூல் புஹாரி) இறுதித்தீர்ப்பு நாளில் ஐந்து கேள்விகளுக்கு விடை தராதவரை மனிதன் இறைவனின் நீதிமன்றத்திலிருந்து அகன்று செல்லவே முடியாது. அதில் இரண்டு நேரத்தைப் பற்றியது அவை: 1) உன் ஆயுளை எவ்வாறு செலவிட்டாய், 2) உன் இளமையை எவ்வாறு கழித்தாய். என்பதாகும். (ஆதாரம்: திர்மிதி). மேலும், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் பிரார்த்தனையில் இடம் பெறும் ஒரு வாசகம். ''இறைவா!எங்களை நேரம் குறித்து அலட்சியமாக இருக்க விட்டு விடாதே'' என்பதாகும். அடுத்து உமர்(ரலி) அவர்கள், ''இறைவா! எனது நேரத்தை அதிகப்படுத்துவாயாக. நேரத்தை சரியாக, சிறப்பாக பயன்படுத்தும் நற்பேற்றை அருள்வாயாக'' என்று பிரார்த்திப்பார்கள். (ஸாஹுல் ஹமீத், 2009)

இன்னும் முதுமை வருமுன் இளமையையும், மரணம் வருமுன் வாழ்க்கையைப் பயன்படுத்திக்கொள் என்ற நேரம் குறித்த பொன்மொழி பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் நமது இந்த உலக வாழ்க்கை மிகவும் குறுகியது. அல்லாஹ்விடத்தில் 2 மணிநேரத்திற்கு உட்பட்டதாகும். அல்லாஹ் மனிதர்களுக்கு வாழ்க்கை எனும் கேள்வித்தாளை வழங்கி உலகம் எனும் மண்டபத்தில் பரீட்சை வைத்திருக்கின்றான். இன்னும் மு..மின்களுக்கு இது ஒரு சோதனைக் களமாகவே இருக்கிறது எனச் சொல்லிக்காட்டுகின்றான்.

**பொழுதுபோக்கில் இஸ்லாமிய வரையறைகள்**

பொதுவாக பொழுது போக்கு பற்றி பல அறிஞுர்களும் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். ''ஒருவர் தேர்ந்தெடுக்கும் எந்த விதத்திலும் செலவழிக்கப்படும் ஒன்று பொழுதுபோக்கு'' (Stefan Poser, 2011). மேலும் ''எந்த ஒரு செயலிலும், எந்த ஒரு வெகுமதியையும் எதிர்பார்க்காமல் இன்பத்தை அடைய வேண்டும்'' என மனமகிழ் கருதுகிறார். (Mohammed, etc.al, 2014). இமாம் முப்தி (2009): ''ஓய்வு நேர செயற்பாடு என்பது, அன்றாட நடவடிக்கைகளின் வடிவத்தை எடுத்துக் கொள்ளும். எடுத்துக்காட்டாக, தோட்டம் அல்லது சமையல் வேலைகளை குறிப்பிடலாம். உண்மையில், பொழுதுபோக்குக்காக கருதக்கூடிய செயல்பாடுகளின் பட்டியல் கிட்டத்தட்ட முடிவற்றதாக இருக்கிறது. இது நபருக்கு நபர் வேறுபடுகிறது'' (Mohammed, etc.al, 2014). இப்னு பாரீஸ் என்பவர்" பொழுதுபோக்கு பற்றி குறிப்பிடும் போது, ''ஒரு புறம், ஆறுதல், சோர்வு மற்றும் களைப்படைதல், மற்றும் சாதாரண மனித செயல்பாடுகளுக்குத் திரும்பி, துன்பத்திற்கு பிறகு மனிதனின் ஆன்மா மீண்டும் மகிழ்ச்சியை கொண்டு, உடல் புதுப்பிக்கப்படும் செயற்பாடு'' என்கிறார். ஒவ்வொரு அறிஞரும், பொழுதுபோக்கிற்கான இலக்குகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் ஏற்ப வித்தியாசமாக அதனை வரையறுப்பதால், ஒரு ஒன்றுபட்ட வரையறை இல்லை. வேலை மற்றும் வாழ்க்கை கஷ்டங்களிலிருந்து மக்களுக்கு ஆறுதல் அளிப்பதும், அதனால் அவற்றை புதுப்பித்துக் கொள்ளும் செயற்பாடுகளினதும் ஒரு தொகுப்பு'' என்று அர்ஸ்லான் என்பவர் வரையறுக்கிறார்.

கட்டாப் என்பவர், திருப்தியையும் மகிழ்ச்சியையும் பெறுவதற்காக, ஒரு ஓய்வு நேரத்தில் நடக்கும் ஒரு தன்னார்வ செயற்பாடு பொழுதுபோக்காக உள்ளது என்றும், அல்-அஜெஸ், அசா∴ப் என்பவர்கள் ''பொழுதுபோக்கு, ஒரு உணர்வுபூர்வமான நிலை என்றும் நம்புகின்றனர''. இத்தகைய நிலை, சாதனை, புத்துயிர்ப்பு, இன்பம் ஆகிய உணர்வுகளுடன் சேர்ந்து வருகிறது''. இந்த பொழுதுபோக்கு என்பது ''சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓய்வு நேர செயல்பாடுகளுடன் தொடர்புடையது'' என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ''தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டு புதுப்பித்துக் கொள்ளும் பொருட்டு, சுய ஊக்குவிப்பு அல்லது சமூக ஊடாடல் மூலம் தூண்டிவிடப்பட்ட ஒரு தன்னார்வ செயல்பாடாகும். இது போன்ற நடவடிக்கைகள் ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளப்படுவதால், தனி நபர் உடல், ஒழுக்கம், அறிவியல் மற்றும் சமூக மதிப்புக்களை பெற வழிவகுக்கக்கூடும்''. (Mohammed, Awamreh,Jamal, Al-Khaldi, 2014)

இவ்வாறு பல அறிஞுர்கள் கூறுகின்ற போதிலும் இப் பொழுதுபோக்கு ஒவ்வொரு நபரினுடைய சிந்தனை, சூழல், வயது, பால், குடும்ப அமைப்பு என்பவற்றிக்கு ஏற்ப மாறுபடக்கூடியதாகவே காணப்படுகின்றது. எனினும் இது ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டை கொண்டதாக அமைந்திருக்கவில்லை. மாறாக, புதிய தலைமுறையினரை முறையாக உயர்த்தவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும், அவர்களை ஒழுங்குப்படுத்தி, அவர்களின் சுயத்தை உறுதிபடுத்தும் வகையிலும் அனைவரது ஓய்வு நேரமும் சிறந்த வழிகளில் அமையப்பெற வேண்டும் என்பதே இஸ்லாத்தினுடைய வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது.


ISBN 978-624-5736-14-0

அந்தவகையில் இஸ்லாம் பொழுது போக்கு பற்றி எடுத்தியம்புகின்ற சில வரையறைகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

- **ஓய்வு, மனிதன் நிம்மதியை பெற்றுக்கொள்ள இறைவனால் வழங்கப்பட்ட ஒன்று:**

இஸ்லாத்தின் சட்டம் என்பது அல்குர்ஆன் சுன்னாவை சுட்டிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது. இஸ்லாத்தை மதம் என்று சொல்வதை விட்டும் மார்க்கம் (வழிகாட்டல்) என்றே பொதுப்படையாக அழைப்பர். அனைத்திற்கும் நன்மையை விதைக்கும் அது மனித வாழ்வின் ஒரு பகுதியை ஓய்வாக ஆக்கி அந்த ஓய்வு அமைய வேண்டிய விதத்தையும் கூறுகிறது. *"இன்னும் தன்னருளால் இரவையும் பகலையும் உங்களுக்கு அவனே ஆக்கினான். (இரவை) அதில் நீங்கள் இளைப்பாறுவதற்கும், பகலை நீங்கள் (அதில்) அவனுடைய அருளை தேடிக் கொள்வதற்கும் இன்னும் நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற்காகவும் (அவ்வாறு ஆக்கியுள்ளான்.)* (அல்குர்ஆன், 28: 73). இங்கு அல்குர்ஆன் ஒரு மனிதனின் வாழ்வை இரண்டாக பிரித்து அதில் ஒன்றை இறைவனின் அருளை பெற்றுக் கொள்வதற்காகவும் இன்னொன்றை ஓய்வுக்கானதாகவும் வரையறை செய்கிறது. அதனை மனிதன் அவ்வாறே அமைத்துக் கொள்வது அவனுக்கு கடமையானதாகவும் இறை கட்டளையாகவும் அமைந்துள்ளது.

- **பொழுதுபோக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவே…**

மேலும் அல்குர்ஆன் (28: 73) வசனம் இறைவனுக்கு 'நன்றி செலுத்தவதற்காகவும்' என்ற சொல்லை இளைப்பாரும் சந்தர்ப்பத்துடன் இணைத்து கூறியிருப்பதானது, மனிதனது ஓய்வு வெறுமனே மனம் போன போக்கில் அமைந்து விடக்கூடியதொன்றல்ல. மாறாக அச்செயற்பாடு இறைவனை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துவதாக அமைந்திருக்க வேண்டும் என்பதே இங்கு கட்டளையாக காணப்படுகின்றது.

இது குறித்து பேசப்படும் ஒரு ஹதீஸ் "மு∴மீன்கள் இறைவனை நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும் உறங்கிய நிலையிலும் நினைவு கூறுபவர்களாக காணப்படுவார்கள்." என்று கூறுகின்றது. (அல் ஹதீஸ்) மேலும் "மு∴மீன்களே! அல்லாஹ்வை மிக அதிகமாக திக்ர் செய்யுங்கள். காலையிலும் மாலையிலும் அவனை தஸ்பீஹ் செய்யுங்கள்" (அல்குர்ஆன்)

- **இவ்வுலக வாழ்வு வீணும் விளையாட்டும் என்பதை சுட்டிக்காட்டல்:**

இன்று பொழுதுபோக்கு அம்சங்களில் கேளிக்கைகள் வீணான அம்சங்கள் என்பன அதிகரித்து காணப்படுகின்றன. திரையரங்குகள் நிரம்பி வழிகின்றது, ஆண் பெண் கலப்பு இடங்களும் பரவலாக காணக்கூடியதாகவே உள்ளன. இன்று தொழில் நுட்பத்தின் தாக்கத்தால் டிஜிட்டல் தொலைபேசி, சின்னத்திரை, திரைப்படங்கள், வீடியோ கேம்ஸ் என்பன சிறுவர்கள் பெரியவர்கள் என அனைவர் மத்தியிலும் புரல்கின்றன. இது சமூகத்தில் பல பாதிப்புக்களையும் ஏற்படுத்திய வண்ணமே உள்ளன. ஆனால் இவ்வாறானதோர் பொழுதுபோக்கு விடயங்களை இஸ்லாம் தடை செய்கின்றது. நவீனத்திற்கு மாற்றமான

கருத்தை அது முன்வைக்கவில்லை. மாறாக மனித செயற்பாடுகளையும் சிந்தனையையும் மழுங்கடிக்கச் செய்யும் கேளிக்கைகளையும் வீண் செயல்களையும் அது தவிர்க்கின்றது.

இது பற்றி அல்குர்ஆன் *''இவ்வுலக வாழ்க்கை வீணும் விளையாட்டும் தவிர வேறில்லை. மறுமை வாழ்வுதான் வாழ்வாகும், அவர்கள் அறியக்கூடாதா?* (29 : 64) மேலும் *''(மனிதர்களே!) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக இவ்வுல வாழ்க்கையெல்லாம் வீண் விளையாட்டும் வேடிக்கையும் அலங்காரமும் தான், அன்றி உங்களுக்கிடையில் பொறாமை ஏற்படுத்துவதாகவும் பொருள்களிலும் சந்ததிகளிலும் போட்டி ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது. அதன் உதாரணமாவது ஒரு மலையினை ஒத்ததாகவே இருக்கின்றது……''* (அல்குர்ஆன் : 57:20) இவ்வசனத்தில் உலகத்தை போட்டிக்குரியதாகவும் அலங்காரமுமாகவே அல்குர்ஆன் பேசியுள்ளது. ஏனெனில் இதுவே பலரது வாழ்விலும் நடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் இஸ்லாம் மனித வாழ்வின் நடத்தையைக் கொண்டு மக்களின் வாழ்க்கையில் உளவியல், அறிவார்ந்த சமூக மற்றும் சமூதாயத்தை உருவாக்க இயைகின்றது.

- **தீமையானவற்றை தவிர்த்தல்:**

மேற்குலகம் வாழ்வை நன்மைக்கும் தீமைக்கும் இடைப்பட்ட நிலையில் வைத்து இன்பம் தருவதை தனக்கான வாழ்க்கையாக தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. இதுவே பொதுவான நிலைப்பாடாகவும் காணப்படுகின்றது. ஆனால் இஸ்லாம் மனிதனுக்கு எது நன்மை பயப்பதோ அதனையே அனைத்து நேரங்களிலும் வழிப்படுத்த கட்டளையிடுகிறது. தீமையான விடயங்களை (தடை செய்யப்பட்ட பொழுதுபோக்கு) தவிர்ப்பதில் இஸ்லாம் இரண்டு முக்கிய விதிகளை கூறுகிறது.

1. சுயமாக தடை செய்யப்பட்ட பொழுதுபோக்கு: இது அடிப்படையில் தீமையானதாக கருதப்பட்டு இஸ்லாம் தடைவிதித்திருக்கும் பொழுதுபோக்கு வகை. உதாரணமாக, போதைப் பொருட்களையும், மதுபானங்களையும் எடுத்துக்கொள்ளல், விபச்சாரம் செய்து, அல்லது சுதந்திர மல்யுத்தத்தில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியைத் தேடுதல். *''உங்கள் உலக வாழ்க்கையில் உங்கள் நன்மைகளை நீங்கள் அழித்து விட்டீர்கள். அதிலேயே இன்பம் கண்டீர்கள். நியாயமின்றி பூமியில் நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருந்ததாலும், நீங்கள் குற்றம் புரிந்து கொண்டிருந்ததாலும் இன்று இழிவு தரும் வேதனை பரிசாக வழங்கப்படுகிறீர்கள் (என்று கூறப்படும்)''* (அல்குர்ஆன் : 46: 20). உலகத்தில் இன்பத்தை மாத்திரம் எதிர்பார்த்து தனது நேரத்தையும் வாழ்வையும் செலவிட்டவன் மறுமையில் நஷ்டவாளியாக கருதப்படுகிறான்.

*''ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிப்படுதலும், அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களாகும் ஆகவே நீங்கள் அவற்றை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்.''* (அல்குர்ஆன் : 2: 219).

2. சில விதி முறைகளின் காரணமாக தடை செய்யப்பட்ட கேளிக்கைகள்: இவை ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட பொழுதுபோக்கு, ஆனால் அதற்கு தடையை ஏற்படுத்துவதில்

வேறு சில நடவடிக்கைகள் தொடர்புடையதாக காணப்படல்: உதாரணமாக நீச்சல் அனுமதிக்கப்பட்டிருப்பினும் ஒழுக்கமற்ற நீச்சல் உடையில் நீந்துவது அல்லது ஒழுக்கமற்ற ஆடைகளை அணிந்து விளையாடுதல் போன்றவை தடுக்கப்பட்டது. இந்த விளையாட்டுகள் தடை செய்யப்படவில்லை, மாறாக, உடல் பாகங்களை பிரித்திடுதல் போன்ற பிற காரணங்களால் அவை தடை செய்யப்படுகின்றன. மேலும் கலப்பு (ஆண், பெண்) பயணங்களும் இதனுடன் சேர்ந்து தடையான பொழுபோக்காக அமைந்துள்ளது.

- **நன்மையானவற்றை மாத்திரம் எடுத்துக் கொள்ளல் (இஸ்லாம் சில விடயங்களை பொழுதுபோக்கிற்காக அனுமதித்துள்ளது.)**

தீமையான விடயங்களை தடுத்து வரையறைகளை ஏற்படுத்தும் இஸ்லாம் ஒரு மனிதனின் பொழுது போக்கு விடயங்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது குறித்தும் அழகிய வழிகாட்டல்களை எடுத்தியம்புகின்றது.

**வணக்க வழிபாட்டு அம்சங்களில் ஈடுபடல் - 1.** அழைப்புப்பணியை மேற்கொள்ளல் - உங்களில் ஒருவர் தமக்கு விரும்புவதையே தம் சகோதரருக்கும் விரும்பாதவரை, (பரிபூரண) மூ.ஃமினாக ஆகமாட்டார்'' என நபி(ஸல்) கூறினார்கள். – ஆதாரம், புகாரி, முஸ்லிம்– அறிவிப்பவர்: அனஸ்(ரலி). அழைப்புப்பணி என்பது முஸ்லிம் ஒவ்வொருவர்மீதும் கடமையாக்கப்பட்ட ஒன்றாகும். அழைப்புப்பணிக்காக நேரத்தை ஒதுக்குவதும் முக்கியமானதாகும். **2.** உபரியான வணக்கங்களில் அதிகம் ஈடுபடுதல் - இஸ்லாத்தில் கட்டாயம் செய்யப்பட வேண்டிய வணக்கங்கள் (தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்) காணப்பட்டிருப்பினும் அதில் ஏற்படும் சில குறைகளை நிவர்த்தி செய்யவும் அல்லாஹ்வின் நேசத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும் உபரியான வணக்கங்களை நபி(ஸல்) அவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள். **3.** சுன்னத் தொழுகைகள் - ஐவேளை தொழுபவர்கள் கூட முன் பின் சுன்னத் தொழுகைகளை தொழுவதில் பாராமுகமாக இருக்கிறார்கள். தொழுகை முஸ்லிம் ஒவ்வொருவர் மீதும் நேரம் குறிக்கப்பட்ட ஒரு கடமையாகும். தொழுகைகளை அதற்குறிய நேரத்தில் தொழுவதுடன், தொழுகைக்கு முன் பின் சுன்னத்துகளை நிறைவேற்றுவேதனால், அதனால் நன்மைகள் கிடைக்கப் பெறும் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. **4.** திக்ர் செய்தல் (பிரார்த்தனை) -மு.ஃமின்களின் உள்ளம் எந்த நேரமும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தவையாகவே இருக்கும். அல்லாஹ்வின் திருநாமங்களைக் கொண்டு அவனைப் புகழுங்கள். அவனிடமே உதவிகளையும் தேடுங்கள். உள்ளத்தாலும் நாவாலும் திக்ர் செய்யுங்கள். சுப்ஹானல்லாஹ் என்று கூறுவதும், அல்ஹம்துலில்லாஹ் என்றுகூறுவதும், அல்லாஹ் அக்பர் என்று கூறுவதும் அவனிடத்தில் தர்மமாகக் கணக்கிடப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் சொல்வதற்கு ஓர் வினாடியே ஆகும். (மாலிகான், 2009)

**குர்ஆன் ஓதுதல் மற்றும் மனனம் செய்தல்** - நபி(ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வின் அருள்மறையான குர்ஆனிலிருந்து ஓர் எழுத்தை ஒருவர் ஓதுவாரானால், அவருக்கு ஒரு நன்மை உண்டு. அந்த ஒரு நன்மை பத்து மடங்கு கொண்டதாகும். *''அலீப், லாம், மீம் ஓர் எழுத்து என்று நான் கூறமாட்டேன். மாறாக அலிப் ஒரு எழுத்தாகும், லாம் ஓர் எழுத்தாகும்,*

*மீம் ஓர் எழுத்தாகும். (மூன்றும் மூன்று எழுத்துகளாகும். அம்மூன்றையும் ஒருவர் ஓதினால் ஒவ்வொன்றுக்கும் பத்து நன்மைகள் வீதம் முப்பது நன்மைகளைப் பெறுவார்)''* ஆதாரம்: திர்மிதி: அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி). நபி(ஸல்) கூறினார்கள்: குர்ஆனிலிருந்து சிறிதளவு கூட தம் உள்ளத்தில் மனனம் இல்லாதவர் பாழடைந்த வீடு போன்றாவார். (திர்மிதி: அப்துல்லாஹ் பின் அப்பாஸ்).

**வெளிப் பயணங்கள் மேற்கொள்ளல்** - நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''*ஒவ்வொரு நபரும் அவருடைய சிறந்த நண்பனுடைய மார்க்கத்தை பின்பற்றுகிறீர்கள் ஆகவே, நீங்கள் நண்பர்களை தேர்ந்தெடுக்கும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்?*'' என்று கூறினார்கள். மனிதர்கள் அனைவரும் சமூக ஜீவன்கள் என்பதால், சமூகமயமாக்குவது என்பது, வேடிக்கைப் பெறும் வழிகளில் அதிகமாக இருக்கும். அப்போது சரியான விடயங்களை தேர்ந்து எடுத்தல். குடும்பத்திற்காக நேரங்களைச் செலவழித்தல் போன்றவற்றை ஓய்வு நேரங்களில் மேற்கொள்வதனால் சமூகத்துடனான உறவு ''அதிகரிக்கவும் நேரிடுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: *மூ.'.மின்களில் ஈமானால் பரிபூரணமானவர், அவர்களில் குணத்தால் மிக அழகானவரே! உங்களில் சிறந்தவர்கள், உங்கள் மனைவியரிடம் சிறந்தவர்களே*''. அறிவிப்பவர்: அபூ'ஹுரைரா (ரலி). இதன் போது, ஒரு மனிதன் தனது ஓய்வு நேரத்தினை நண்பர்கள், குடும்பம், சமூகம் என்ற ரீதியில் அழகிய முறையில் கழிப்பதானது, தனிமனித மற்றும் சமூக நலனை எற்படுத்துவதுடன் அவர்களுடைய ஓய்வு நேரமானது, நன்மையை சார்ந்தததாகவும் அமைந்துவிடும் என்பது தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது.

**வேடிக்கையாகவும், மன நிம்மதிக்காகவும் சிலவற்றை கற்றல் அல்லது வாசித்தல்** - சிறந்த அனுபவத்தை தரக்கூடிய புனைக்கதைகள் நூல்கள், பல்வேறு தலைப்புக்களினை உள்ளடக்கியுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றின் மீது ஓய்வு நேரத்தில் ஈடுபாடு காட்டுவதற்கும் இஸ்லாமம் அனுமதியளித்துள்ளது. ஏனெனில் *'இறைவன் மனிதனைப் படைத்து முதலில் அனைத்தையும் கற்றுக் கொடுத்தான். வாசிக்கவும் தூண்டினான்'* (ஸூரா அல் பலக்: 01). அதுமட்டுமன்றி 'நவீன மற்றும் பண்டைய விடயங்களையும் கற்றுக் கொள்வது நன்மையான செயற்பாடாகும்' (Mohamed, et.al,2014).

**இயற்கையை கண்டுகழித்தல்** - இயற்கையான கடல், காடுகள், பூங்காக்கள், நீர்வீழ்ச்சிகள், விலங்குகள், பண்ணை நிலங்கள், பாலைவன நிலம், மரங்கள் ஆகியவை மிகவும் அழகானவை. மேலும், நீங்கள் அவற்றைக் கொண்டு உங்களை அல்லாஹ்வைக் நெருங்கச் செய்வதற்காகவும், அதில் உங்களுக்கு அமைதியையும் உணரச் செய்கின்றான். மேலும் அவனது படைப்பினங்களை கொண்டு திக்ர் செய்ய இடம் அளிக்கின்றான். (மாலிகான், 2009).

**இஸ்லாமிய பாடல்கள்** - பாடல்களில் நல்ல, கெட்ட, மற்றும் நடுநிலை தன்மை என்பன உள்ளன. சில பாடல்கள் பாலியல் மற்றும் வன்முறை உள்ளடக்கத்துடன் கூடிய பிரபலமான இசைக்கு ஒரு சிறந்த மாற்றாக இருக்கலாம். (இமாம் முப்தி, 2019). ஹபஷாவைச் சேர்ந்த ஊழியர்கள் நபி (ஸல்) அவர்களின் முன் நடனம் ஆட பழகிவிட்டார்கள் என ஒரு முறை அனஸ் பின் மாலிக் (றழி) கூறினார். (அறிவிப்பவர்: இப்னு ஹப்பான் 1993) இமாம் கஸ்ஸாலி

இஸ்லாத்தில் இசை அனுமதிக்கப்பட்டதிற்கான 04 தன்மைகளை குறிப்பிடுகிறார். 1- புனித தலங்களை விபரிக்கும் கவிதைகள் பாடல்கள். 2- மக்களை தீமைக்கெதிராக எதிர்த்து போராடவும் எதிரகளை தைரியமாக எதிர்த்து நிக்கவும் ஊக்குவிக்கும் பாடல்கள். 3- மரியாதை செலுத்தும் பாடல்கள். 4- மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களை கொண்டாடுதல். இதற்கு உதாரணமாக, நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்த போது வரவேற்கப்பட்ட முறையை குறிப்பிடலாம் (Mohamed, Awamreh etc, 2014).

**நீச்சல், வில்வித்தை, தற்காப்பு கலைகள், மற்றும் தோட்டம்** - நீச்சலும் வில்வித்தைகளும், முஹம்மது நபி (ஸல்) அவர்களிடமிருந்து வந்தது. நீச்சலை பொறுத்தவரை, பாலினத்திற்கான, ஆடை இடையே உள்ள வித்தியாசங்களை இஸ்லாமிய வழிகாட்டுதல்களுக்கிடையே அமைத்துக் கொள்ள வேண்டும். தற்காப்பு கலைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால், தலை வணங்குவது அல்லது ஷிர்க் போன்ற தடை செய்யப்பட்ட செயல்களில் ஈடுபடக்கூடாது. (மாலிகான், 2009). அம்பு எறிதல், ஈட்டி எறிதல் என்பன பொழுதுபோக்கின் முக்கிய அம்சங்களாகும். ''உண்மையில் வலிமை என்பது (அம்புகள் மற்றும் ஈட்டிகளை) வீசுதல் ஆகும் (அறிவிப்பவர்: இப்னு ஹன்பல்) (Mohamed, Awamreh etc, 2014).

**முடிவுரை:**

இன்றைய உலகில் ஓய்வு நேரத்தை கழிப்பதற்காக பல்வேறான செயற்பாடுகளும் ஓய்வு நேர சாதனங்களும் மலிந்து காணப்படுகின்றன. இவை முஸ்லிம்களின் வாழ்விலும் தாக்கம் செலுத்தியுள்ளன. இஸ்லாம் ஓய்வு நேரத்தை மனிதனுக்கு அருட்கொடையாக ஆக்கியுள்ளது. அது அனைத்து விடயங்களைக் கொண்டும் மனிதனுடைய வாழ்க்கைக்கு நன்மையை ஏற்படுத்துகின்றது. இன்று ஓய்வு நேரத்தில் ஈடுபடுவதற்கென பல்வேறு செயற்பாடுகள் காணப்பட்டபோதிலும் அவை அனைத்தும் மனித வாழ்க்கைக்கு பலனை ஈட்டி தருவதாக இல்லை. ஆனால், மனித வாழ்வின் அனைத்து விடயங்களையும் நேரிய வழியில் அமைத்துக் கொள்வதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் இஸ்லாம் காட்டித்தந்துள்ளது.

மனித வாழ்வின் ஒட்டுமொத்த செயற்பாடும் அவனது நேரத்தை குறித்தே அமைந்துள்ளது. அது இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதம், இறைவனே இக்காலத்தையும் வாழ்வையும் தோற்றுவித்துள்ளான், அவனால் வழங்கப்பட்டுள்ள இது மனித வாழ்வையும் இறை நம்பிக்கையையும் ஒன்றிணைப்பதாகவே காணப்படுகின்றது. அதற்கான பாதைகளை இஸ்லாம் சொல்லியதுடன் மட்டுமன்றி நபி (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் வாழ்வின் மூலம் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளது. அந்த வகையில் தீமைகளை விட்டு விலகி ஒரு மனிதர் தன் வாழ்நாளை நல்லமுறையில் கழித்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவதற்கான விடயங்கள் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டள்ளன.

**உசாத்துணைகள்**

Academic Editor: Claudia Hilton. (2018). Correlation between Leisure Activity Time

and Life Satisfaction: Based on KOSTAT Time Use Survey Data. *HindawiOccupational therapy International Volume 2018, Article ID 5154819.*

Aisha Stacey. (2018). The importance of time in Islam. *4.4 out of 5. Articles The Benefits of Islam Benefits to Society.*

Al-Wiss, K. (2001). Islam and Recreation: Historical View. *Journal of Eduvation. Physical Education College, Baghdad University. Vol 10 (2): 1-27.*

Arslan, S. (2013). The Effect of Recreation Course on undergraduate student at Physical Education Education and sports Department Regarding Their Awareness Level about Leisure. *International Journal of Academic Research part B, Vol 5 (5): 351- 356.*

Ciochetto, L. (2015). The Impact of New Technologies on Leisure Activities in Developed and Emerging Economies. *International and Multidisciplinary Journal of Social Sciences, 4(2), 194-214. doi: 10.17583/rimcis.2015.1565.*

Dru Scott. (2004). *The Telephone and Time Management: Making It a Tool and Not a Tyrandt.* New Delhi: Viva Books Private Limited

Farough Fattahi M., & Feridon Tondnevis. (2012). Investicating of leisure time in female students at Iran's Islamic Azad University. *Euro.J. Exp.Bio.,2012, 2 (4): 1062-1070.*

Fitri, M., Sultoni, k., & Salamuddin. (2017). Sports Activities High Performanc Athletes MuslimWomen in Indonesiya and Malasiya. *IOP Conf. Series Materials Science and Engineering,* ***180*** *(2017) 012213 doi:10.1088/1757 899x/180/1/012213.*

Fransjs, S., Stan, R., & frank, V. (2010). Religious Practies, Islamic Immigrant Moroccan and Turkish men in Belgium. *A Journal for the Scientific Study of Religion, Vol; 49 (2), 242-253.*

Haneef, S. (2005). *Ethics and Fiquh for Daily Life an Islamic Outline. IIUM Press: International Islamic University Malasiya.*

Henderson, A., & Gibson, J. (2013). An Integrative Review of women, Gender and leisure Increasing Complexties. *Journal of Leisure Research 2013,vol,4 No.2,pp. 115-135*

Mohammed., & Awamerh. (2014). Recreational Education in Islam. *British Journal of Education Vol.2,pp.70-80,June 2014*

Moshen Mazheriniya. (2017). Recreation Position in islamic Lifestyle. *International Journal of Scientific Study. July 2017,vol.issue 4.*

Murtiadha, A. (2008). The Quran and The Nature of Life. *Ahlul Bayt World Assembly. Vol: 8 (3), 472 – 508.*

Pablo Gracia. (2015). Parent- child Leisure Activities and Cultural Capital in the united Kingdom: The Genereded Effects of education and social Class. *Social Science Research Vol 52 (2015) 290-302*.

Reza Aqapour., Moshen Mousavi., & seyad Ali Akbar Rabi Nattaj. (2019). Studing of Leisure Time and Tourism in Quran and Hadiths with emphasis and spirituality. *International Journal of Tourism and spirituality 3 (2), Winter 2019, 106-118.*

Singh, A., Matson, J., Cooper, C., & Adkins, A. (2009). Readability and Reading Level of Behavior Treatment Plans in Intellectual Disabilities. *Journal of Development & Physical Disabilities, Vol 21 (3): 185-194.*

Shahidhullah Faridi. (1993). *Every Dy Practies in Islam.* New Delhi: Royal Publishers Distributors.

பாத்திமா ஷமீரா, எ.வா., பாத்திமா நாதிரா, ஏ.கே. (2017). இளைஞர்கள் மீதான ஊடகங்களின் தாக்கங்கள்: *இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களின் மையப்படுத்திய ஆய்வு. 972 0f 1003.*

றினோஸா, எம்.ஐ., மஸாஹிர், எஸ்.எம்.எம். (2015). தென்னிந்தியத் தொலக்காட்சித் தொடர் நாடகங்களால் முஸ்லிம் பெண்களிடையே ஏற்பட்டுள்ள எதிர்மறைத்தாக்கங்கள். *7வது சர்வதேச ஆய்வு மாநாடு-2015, FIA, SEUSL*.


ISBN 978-624-5736-14-0